செ.வெ.எண்: 44 நாள்: 17.11.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை முதல்கட்ட சரிபார்க்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் இன்று (17.11.2021) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்கட்ட சரிபார்க்கும் பணியினை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களின் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**இது குறித்து மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.**

எதிர்வரும் 2021-ம் ஆண்டு நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களான 200 கட்டுப்பாட்டுக் கருவிகளும் (Control Units), 400 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (Ballot Units) வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டுக் கருவிகள், வாக்குப்பதிவு இயந்திரங்களை இன்று (17.11.2021) முதல் பெல் நிறுவன பொறியாளர்களைக் கொண்டு முதல்கட்ட சரிபார்ப்பு பணிகள் உரிய பாதுகாப்பு நடைமுறைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களின் முன்னிலையில், மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, நகராட்சி ஆணையாளர் திரு.குமரிமன்னன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(உள்ளாட்சி தேர்தல்) திரு.மோகன், லப்பைக்குடிக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சதீஸ் கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வெங்கடேஸ்வரன்(உள்ளாட்சி தேர்தல்), திரு.செந்தில், திரு.மோகன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர்.**